**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 52 / 2022**
**2025ம் வருடம் நவம்பர் மாதம் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ம.சா.1 – பவ்யா**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு,வி :–**

1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு அமலில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிய ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு அமலில் உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் மட்டுமே இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி :–**

இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து எனது தந்தையின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தின்படி எனது தந்தையின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது தெரியவருகிறது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட உடன் எனது தந்தை உடனடியாக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். எனது தந்தை வேலம்மாள் மருத்துவமனையில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை சிகிச்சை எடுத்தார், எந்தவிதமான சிகிச்சை வழங்கப்பட்டது என்பதற்கான மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சிகிச்சை குறிப்பேட்டில் எனது தந்தை சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்ட போது நல்ல நிலையில் விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அதை

தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்ட அன்றே இறந்துவிட்டார். எனது தந்தையின் இறப்பு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை செய்தால் தான் எனது தந்தை விபத்தினால் இறந்துபோனார் என தெரியவரும் என்றால் சரியல்ல. எனது தந்தை வயோதிகம் காரணமாகவும் வேறு உடல் உபாதைகளாலும் இறந்துபோனார் என்றும் விபத்தில் ஏற்பட்ட காயங்களினால் இறக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இழப்பீடு பெற வேண்டும் என்பதால் எனது தந்தை விபத்தினால் இறந்து போனதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறப்பு அறிக்கையை தாக்கல் செய்தால் அது எங்களுக்கு பாதகமாகிவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதையும் அதற்கு ஏற்பட்ட மருத்துவ செலவுகளையும் நிரூபிக்க வேலம்மாள் மருத்துவமனை நிர்வாகத்தை அழைத்து விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது தந்தையின் தொழில். வயது மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தின் மூலம் ஏற்பட்ட காயத்தினால் எனது தந்தைக்கு இறப்பு ஏற்படாததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து எனது தந்தையின் கவனக்குறைவால்

ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அடிப்படை ஆதாரமின்றி மிகைப்படுத்தி இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**